# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 139/2024 |
| P.W. | : | 1 |
| Name | : | திரு. ராஜசேகர் |
| Father Name | : | திரு. கருப்பணகவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2026

எதிரி காணொளி காட்சி மூலமாக ஆஜர் படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :-**

நான் நஞ்சையன் தோட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். 02.12.2009 அன்று நள்ளிரவு ஒரு 12.00 மணியளவில் நான் மாட்டுகொட்டாயில் தூங்கி கொண்டிருந்தேன். நடுஇரவு 12.00 மணியளவில் நான்கு நபர்கள் வந்து இரண்டு கைகளையும், கால்களையும் அழுத்தி பிடித்துக்கொண்டார்கள். நாங்கள் மதுரையை சார்ந்தவர்கள் என்றும், எங்களுக்கு பிழைக்க வழியில்லை என்றும், திருட

வந்துள்ளதாகவும் சொன்னார்கள். என் அக்கா மகன் ரவிக்குமார் மற்றும் என் பெற்றோர்கள் வீட்டிற்குள் இருந்தார்கள். என்னிடம் வீட்டின் கதவை திறந்துவிட சொல் என்றும், இல்லையென்றால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள் உடனே கதவை திறந்துவெளியே வந்த ரவிக்குமாரையும் பிடித்துக்கொண்டார்கள். நானும், ரவிக்குமாரும் லுங்கி கட்டியிருந்தோம் அதை அவிழ்த்து எங்களது இரு கைகளையும் பின்னார் கட்டிவிட்டார்கள். வாழைதோப்பிற்குள் இழுத்து சென்றார்கள். அங்கு ஒரு இடத்தில் உட்கார வைத்துவிட்டு உன் அம்மாவின் தாலிக்கொடி எங்குள்ளது என்று கேட்டார்கள். பேங்கில் அடகுவைத்துவிட்டேன் என்று சொன்னேன் அப்போது ஒரு நபர் என்னையும் என் அக்கா பையனையும் அடித்துவிட்டார் அப்போது ஒரு நபர் என் கழுத்தில் கத்தியை வைத்துவிட்டார். நான் என்ன சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை மற்ற நபர்கள் வீட்டிற்குள் சென்று பீரோவை உடைத்து உள்ளே இருந்த டிவிடி பிளேயர், என் பாக்கெட்டில் இருந்த ரூ.2,000/-, எனது கடிகாரம், என்னுடைய மொபைல் போன், என் அம்மாவின் தோடு, எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நாங்கள் உட்கார்திருந்த இடத்திற்கே வந்தார்கள். அப்போது சிலர் எங்களை கிணற்றில் தள்ளிவிட வேண்டும் என்று சொன்னார்கள் ஆனால் ஒரு சிலர் எங்களை வீட்டிற்குள் வைத்து பூட்டி விடுங்கள் என்று சொல்லி வீட்டிற்குள் வைத்து வெளியே தாழ்பாள் போட்டுவிட்டு போய்விட்டார்கள். எங்களது வீட்டிற்கும், மற்ற வீடுகளுக்கும் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும் விடியும்வரை நாங்கள் சப்தம்போட்டோம் யாரும் வரவில்லை. ஒரு 6.00 மணியளில் வீட்டின் பின் சன்னலை திறந்து சப்தம் போட்ட சமயம் பழனிச்சாமி என்பவர் வந்து வீட்டை திறந்துவிட்டார். இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரின் நகல்தான் மேற்படி ஆவணம் **அ.சா.ஆ.1,** மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் மங்கி குள்ளா போட்டிருந்தார்கள். எனவே அவர்களை எனக்கு அடையாளம் தெரியாது. நடமாடிக்கொண்டிருந்ததால் 6 நபர்கள் என்று தெரிந்துகொண்டேன். போலிசார் சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளை கைது செய்தார்கள். கோவை மத்திய சிறையில் வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தினார்கள். அப்போது அடையாளம் காண்பித்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.**